**19.07.2022**

**அ.வ.எண். 27/2020**

**<u>வா.சா.1 ராமதாஸ் அவர்களின் 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தடை உத்தரவு கோரி நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து என்று குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணின் பழைய சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனக்கு பாகபிரிவினை மூலம் கிடைத்தது. எனக்கு எழுத படிக்க தெரியாது. வா.சா.ஆ.1 பாகபரிவினை பத்திரம் என்றால் சரிதான். பாகபிரிவினை 22.12.2005 அன்று எழுதப்பட்டது என்றால் சரிதான். கோவிந்தன், வேணு, ராமதாஸ், கமலக்கண்ணன், பூபாலன், முனியம்மாள் ஆகியோர்களுக்கிடையே பாகபரிவினை ஏற்பட்டது. பாகபிரிவினை பத்திரத்திலுள்ள எந்த அட்டவணை சொத்து எனக்கு கிடைத்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்தபோது வழக்கு விவரங்களை எனது வழக்கறிஞரிடம் நான் தான் சொன்னேன். பாகபிரிவினையின் போது பத்திரத்திலுள்ள '**டி**' அட்டவணை சொத்து எனக்கு கிடைத்தது என்று எனது பிராதுவில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவாவில் '**டி**' அட்டவணை சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்று சொல்லிவிட்டு தற்போது எந்த அட்டவணை என்று தெரியாது என்று பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாகபிரிவினையின் போது 4 ஏக்கர் 35 செண்டு நிலம் எனக்கு ஒதுக்கப்பட்டது. பாகபிரிவினையின் போது டி அட்டவணை சொத்தில் 1 ஏக்கர் நிலம் தான் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றாலும் தற்போது நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர். தாவா சொத்து போக மீதமுள்ள 3 ஏக்கர் 45 செண்டு நிலத்தை யார் அனுபவிக்கிறார் என்றால் நான் தான் அனுபவித்து வருகிறேன். 4 ஏக்கர் 45 செண்டு நிலம் எனக்கு தான் சொந்தம் என்பதற்கு ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னென்ன ஆவணங்கள் என்று எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். 1 ஏக்கர் நிலத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் தற்போது 4 ஏக்கர் 45 செண்டு நிலம் எனக்கு சொந்தம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 4 ஏக்கர் 45 செண்டு நிலத்தின் பழைய சர்வே எண் 60/3ஏ1 என்றால் சரிதான். அதில் 1 ஏக்கர் நிலம் தான் எனக்கு பாகபிரிவினை மூலம் கிடைத்தது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு மேற்படி பாகபிரிவினை மூலம் F அட்டவணை சொத்தாக 21 செண்டு நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கமலக்கண்ணனுக்கு 3 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. 1ம் பிரதிவாதி 21 செண்டு தான் ஒதுக்கப்பட்டது

என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பாகபிரிவிணையின் போது சர்வே எண் 60/3ஏ1ல் 4 ஏக்கர் 45 செண்டு நிலத்தில் எனக்கு ஒரு ஏக்கரும் 1ம் பிரதிவாதிக்கு 21 செண்டு நிலமும், 2ம் பிரதிவாதிக்கு 21 செண்டு நிலமும், கோவிந்தன் என்பவருக்கு 3 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான், பாதைக்கு 3 செண்டு நிலம் ஒதுக்கப்பட்டது. மேற்படி 4 ஏக்கர் 45 செண்டு நிலத்தை பாகபிரிவிணையில் ஒதுக்கபட்ட பிரகாரம் நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் நிலத்திற்கு நான்கு எல்லைகள் வடக்கு கோவிந்தன் நிலம், மேற்கே பூபாலன் நிலம், தெற்கில் வாய்க்கால், கிழக்கில் கமலக்கண்ணன் நிலம் உள்ளது. கிழக்கில் பொது வழி உள்ளது என்றால் பத்திரத்தில் அவ்வாறு இல்லை.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கபடுகிறது).